IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**OS.No**.61/2023 **Date**: 20.01.2025

**PW**1- வசந்தா

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்து விவசாய நிலம். அந்த நிலத்தை ஒட்டி எனக்கு சொந்தமான வேறு நிலமில்லை. அச்சொத்தை ஒட்டி பாதையும் இல்லை. வா.சா.ஆ.1 தேதிக்கு முன்பு நான் தாவா சொத்திற்கு வில்லங்க சான்றிதழ் வாங்கி பார்க்கவில்லை. நான் மீதி கிரைய தொகை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை. நான் சுமார் 4, 5 முறை பிரதிவாதியிடம் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். வா.சா.ஆ.1 ற்கு பின் 6 மாதம் கழித்து கேட்டேன். அப்போது நான் கடன் தான் வாங்கினேன் என்றும், சொத்தை கிரையம் செய்து கொடுக்க முடியாது என்று சொன்னார் என்றால் சரிதான். பின்பு வா.சா.ஆ.1 காலக்கெடு முடியும் தருவாயில் பிரதிவாதிக்கு வழக்கறிஞரின் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 தேதியில் தாவா சொத்தின் அசல் ஆவணத்தையும் பிரதிவாதியிடம் வாங்கி கொண்டேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 தேதியில் எனக்கு ரூ.50 ஆயிரம் பணப் பற்றாக்குறை இருந்தது. 36 மாதங்கள் காலக்கெடு நிர்ணயம் செய்ததற்கான காரணத்தை வா.சா.ஆ.1 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். என் கணவரும் அவரது அண்ணனும் பிரதிவாதி மீது பூலாம்பட்டி காவல் நிலையத்தில் வா.சா.ஆ.1 ல் கண்டுள்ள பணத்தை திருப்பி கொடுக்க வேண்டும் என்று புகார் கொடுத்தார்கள் என்றால் அவர்கள் வேறு விசயமாக காவல் நிலையம் சென்றார்கள். பிரதிவாதி 2023 ஜனவரி வரை எனக்கு வட்டியும் செலுத்தி வந்துள்ளார் என்றால் சரியல்ல. அதனால் மாற்று பரிகாரமும் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா ஒப்பந்த தேதியிலேயே தாவா சொத்தின் மதிப்பு ரூ.15 லட்சம் வரும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கடனுக்காக எழுதப்பட்டதால் தான் 36 மாதங்கள் காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாவாவில் கேட்டு உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை கிரையம் பெற

தயாராகவும், விருப்பமுடனும் இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் காலக்கெடு முடியும் தருவாயில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-வசந்தா

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,

சார்பு நீதிபதி, சங்ககிரி.